13th August 1963]

திரு. கே. ஏ. மதியழகன் : தென் சென்னையின் அவசியத்தைக் கருதி மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள்ளாவது இராயப் பேட்டை ஆஸ்பத்திரியை விருத்தி செய்கின்ற இவ்விஷயத்தில் நம் சர்க்கார் வற்புறுத்துமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அது ஏற்கெனவே அரசாங்கத்தின் யோசனையில் இருக்கிறது.

பயிர்ப் பாதுகாப்பு, கால்நடை இன்சூரன்ஸ் திட்டங்கள்.

*** 119 கேள்வி.—திரு. கே. நாராயணசாமி பிள்ளை :** கனம் விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நம் மாநிலத்தில் பயிர்ப் பாதுகாப்பு, கால்நடை இன்சூரன்ஸ் முதலிய திட்டங்களை நம் சர்க்கார் சீக்கிரத்தில் கொண்டுவர ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : தேசிய நெருக்கடியை உத்தேசித்தும், செலவில் சிக்கனம் செய்ய வேண்டிய அவசியத்தை முன்னிட்டும், இந்திய விவசாய ஆராய்ச்சிக் குழுவினர் ஆலோசனைப்படி கால்நடை இன்சூரன்ஸ் திட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

இம் மாநிலத்தில் பயிர்ப் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டத்தைக் கொண்டுவரும் உத்தேசம் இல்லை.

In view of the National Emergency and the present need for economy in expenditure, the proposal for introducing Cattle Insurance Scheme in the State has been deferred as advised by the Government of India in the Indian Council of Agricultural Research.

There is no proposal to introduce a Crop Insurance Scheme in this State.

திரு. கே. ஏ. மதியழகன் : பல ஆண்டுகளாக எல்லாக் கட்சிகளாலும் கால்நடை இன்ஷூரன்ஸ் திட்டம், பயிர்ப் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் திட்டம் இவை கொண்டுவரப்பட வேண்டுமென்று இம்மன்றத்தில் வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது. அதனால் நன்மை அளிக்கிற இத்திட்டத்தை துரிதப்படுத்த சர்க்கார் முன் வருவார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : கால்நடையைப் பொறுத்தவரை இத் திட்டத்தைக் கொண்டுவர இந்த அரசாங்கம் அக்கறை எடுத்துக் கொண்டுள்ளது. தேசிய நெருக்கடி காரணமாக இது ஒத்தி வைக்கப்பட்டது. அது பின்னால் எடுத்துக் கொள்ளப்படும். பயிர் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் திட்டத்தைப் பொறுத்தவரை சிரமம் இருப்பதால் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

திரு. வை. சங்கரன் : பயிர்ப் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் திட்டம் கொண்டு வரவேண்டுமென்று இங்கு ஒரு சில ஆண்டுகளாக வற்புறுத்தப்பட்டு வருகிறது. அடிக்கடி பருவ மழை தவறி விடுவதால் விவசாயிகள் பாதிக்கப்படுவதால் இது ஒரு நல்ல ஸ்கீம் என்ற முறையில் இதை எடுத்துக் கொள்ள சர்க்கார் உத்தேசிக்குமா ?

[13th August 1963

கனம் திரு. பூ. கக்கன் : பருவ மழை தவறி விடுவதால் கஷ்டம் இருக்கிறது. இதை எப்படி கொண்டு வருவது என்று பார்த்து ஒரு முடிவு எடுக்கப்படாமல் இருக்கிறது.

திரு. கரு. சீமைச்சாமி : தேசீய நெருக்கடி சமயத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்குவது மிக அவசியம். ஆகவே பயிர் பாது காப்பு இன்ஷூரன்ஸ் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தால் விவசாயிகள் தைரியமாக உற்பத்தி செய்ய முடியும். ஆகவே தேசீய நெருக்கடியைக் கருதி பயிர் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் திட்டத்தை அமுல் செய்ய அரசாங்கம் உத்தேசிக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : பயிர் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் திட்டத் தைக் கொண்டு வரவேண்டும் என்று இன்று நேற்றல்ல, 1950-ல் இருந்தே அரசாங்கம் பரிசீலனை செய்து பார்த்துத்தான் பின்னால் இப்போது கொண்டுவர முடியவில்லை என்று தெரிவித்தேன்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : இதை ப்ரைவேட் கம்பனி கள் எடுத்து நடத்த தயாராயிருந்தால் சர்க்கார் ஏதாவது சலுகை கொடுக்க தயாராயிருக்கிறார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : தனியாகக் கேள்வி கேட்டால் பதில் அளிக்கிறேன்.

திரு. க. ர. நல்லசிவம் : புஞ்சைப் பிரதேசங்களில் இல்லாமல் நஞ்சைப் பிரதேசத்தில் ஒரு ஜில்லாவில் மாதிரிக்காக இதை வைத்து நடத்திப் பார்க்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. கே. மூக்கையா தேவர் : பல ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்ததன் பயனாக இத்திட்டத்தை முடிவாகக் கைவிட முடிவு செய்யப்பட்டிருக்கிறதா ? அல்லது இதைக் கொண்டு வருவதற்கு ஏதாவது சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா ?

கனம் திரு. பூ. கக்கன் : கைவிடுவது என்று கூற முடியாது. இப் போது கொண்டுவர சாத்தியம் இல்லை என்றுதான் சர்க்கார் முடிவிற்கு வந்திருக்கிறது. கால்நடையைப் பொறுத்தவரை கொண்டுவரவேண்டுமென்று நினைத்து தேசீய நெருக்கடி காரண மாக ஒத்தி வைத்திருக்கின்றோம், பின்னால் கொண்டு வரலாம்.

திரு. கரு. சீமைச்சாமி : மத்திய உணவு மந்திரி பட்டீல் அவர் கள் சென்ற பட்ஜட் கூட்டத்தின்போது பயிர் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் திட்டத்தை அவசியம் அமுல் செய்யவேண்டு மென்று கூறியிருக்கிறார்கள். அது சம்பந்தமாக இந்த மாநில அரசாங்கத்திற்கு ஏதாவது தாக்கீது வந்திருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : தகவல் இல்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : வேறு மாநிலத்தில் எங்கேயாவது இந்தத் திட்டம் நடைபெறுகிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

திரு. கே.ஆர். ஆர்.எம். கரியமாணிக்கம் அம்பலம் : ஜீவ நதியே இல்லாத கிழக்கு ராமநாதபுரம் பகுதியில் இந்தப் பயிர் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் திட்டத்தைக் கொண்டுவர உத்தேசிப்பார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஒரு பகுதி, ஒரு கிராமம் என்றில்லை. மாநிலம் பூராவிலும் கொண்டு வந்தால் நன்றாயிருக்கும்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : தேசீய நெருக்கடி காலத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டியது அவசியம் என்பதால் இந்த இன்ஷூரன்ஸ் திட்டத்தை அவசியம் மறுபடியும் பரிசீலிக்க அரசாங்கம் உத்தேசிக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : பரிசீலனை செய்துதான் முடிவிற்கு வந்திருக்கிறோம்.

Fair Price Shops

* 120 *Q.*—SRI A. K. SUBBIAH : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the quantity of rice supplied by the Centre for running the Fair Price shops;

(*b*) whether there is any proposal to open more Fair Price Shops; and

(*c*) if so, the details thereof?

THE HON. SRI P. KAKKAN : (*a*) The Government of India are supplying the requirements of rice for distribution through the fair price shops. The present supply is about 3,500 tonnes per month;

(*b*) & (*c*) There are at present 200 fair price shops whose continuance till the end of 30th September 1963 has been sanctioned with the concurrence of the Government of India and the number of additional fair price shops to be opened is under correspondence with the Government of India.

(அ) நியாயவிலைக் கடைகள் மூலம் விநியோகிப்பதற்கு நமக்குத் தேவைப்பட்ட அரிசியை இந்திய அரசினர் வழங்கி வருகின்றனர். தற்சமயம் மாதத்திற்கு சுமார் 3,500 மெட்ரிக் டன்கள் வழங்கப்படுகின்றன.

(இ), (உ) இப்பொழுது 200 நியாயவிலைக் கடைகள் மத்திய அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் 1963-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 30-ம் தேதி வரை அனுமதிக்கப்பட்டுள்ளன. நியாயவிலைக் கடைகள் இன்னும் திறக்க வேண்டிய எண்ணிக்கை பற்றிய விஷயம் மத்திய அரசாங்கத்துடன் கலந்து ஆலோசிக்கப் பட்டு வருகிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : மத்திய சர்க்கார் தங்களுடைய கோதுமைத் திணிப்புத் திட்டத்தின் ஒரு அம்சமாக அரிசிக்கு இனிமேல் பற்றாக்குறை வரப் போகிறது; ஆகவே கோதுமை சாப்பிட்டுத்தான் ஆகவேண்டும் என்று ஏராளமாக கோதுமையை அனுப்பியிருப்பது உண்மைதானா ?